செ.வெ.எண்.379 நாள்.11.06.2018.

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி மகா புஸ்கரண விழா அடிப்படை வசதிகள் செய்வது தொடர்பான முன்னேற்பாடுகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் தாமிரபரணி மகா புஸ்கரண விழாவிற்கு வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்வது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.06.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி தாமிரபரணி மகா புஸ்கரண விழா வரும் அக்டோபர் 2 மற்றும் 3வது வாரங்களில் நடைபெறவுள்ளது. இந்த விழாவின்போது, இந்தியாவின் பலபகுதிகளில் இருந்து அதிகமான பக்தர்கள் தாமிரபரணியில் நீராட வருகை தருவார்கள். திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் முதல் சீவலப்பேரி வரை பல்வேறு முக்கிய பகுதிகளில் பக்தர்கள் நீராட தேவையான வசதிகளை ஏற்படுத்தவும், குறிப்பாக மாநகராட்சிப் பகுதியில் உள்ள குறுக்குத்துறை, மணிமூர்த்திஸ்வரம் கோவில்பகுதி, பேராட்சியம்மன் கோவில் பகுதி உள்பட அனைத்து பகுதிகளிலும் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும், தேவையான போக்குவரத்து வசதிகள் செய்துதரவும், பக்தர்கள் அதிகமாக கூடும் இடங்களில் இரவு நேரங்களில் மின் விளக்குகள் வசதிகளையும், தற்காலிக கழிப்பிட வசதிகளையும் ஏற்படுத்திடவும், அண்ணா பல்கலைக் கழகம் மூலம் அனைத்து பகுதிகளிலும் மாணவ, மாணவியர்கள், தன்னார்வ குழுக்கள் மூலம் பக்தர்களுக்கு உதவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். தேவையான மருத்துவ குழுக்கள் மற்றும் அவசரகால ஊர்தி வாகனங்கள் தயார் நிலையில் வைத்திட வேண்டும். அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பக்தர்களுக்கு தேவையான வசதிகளையும் ஏற்பாடு செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண்சக்திகுமார்,இ.கா.ப., சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.கணேஷ்குமார், திருநெல்வேலி கோட்டாட்சித் தலைவர் திருமதி.மைதிலி, அண்ணா பல்கலைக்கழக முதல்வர் திரு.சக்திநாதன், மகாலெட்சுமி அறக்கட்டளை நிறுவனர் திருமதி.மகாலெட்சுமி சுப்பிரமணியம், முக்கிய பிரமுகர்கள் திரு.சுப்பிரமணியம், திரு.வலசை ஜெயராமன், பேட்டை திரு.மணிஅய்யர், திரு.சிவக்குமார், மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், உதவி ஆணையர் திருமதி.சுப்புலெட்சுமி, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.